Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    புரட்டாதி 23    (09 - 10 - 1991)    புதன்கிழமை    ஓசை: 233

## நோயாளரைப் பார்வையிட காலையில் அனுமதி இல்லை

யாழ் போதனா வைத்தியசாலையில காலை நேரம் பார்வையாளருக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது வைத்தியசாலையின் வார்ட்டுக்களில் தங்கியுள்ள நோயாளரைக் காலை நேரத்தில் பார்வையிடுவதற்கு பார்வையாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் உணவு கொண்டு செல்வோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி முதல் காலை உணவு கொண்டு வருவோர் மட்டும் 6·00 மணிமுதல 7·00 மணிவரை அனுமதிக்கப்படுவர் எனவும் பார்வையாளர் வழமைபோல் நண்பகல் 12·00 மணி முதல் 1·30 மணிவரையும் மாலை 4·00 மணி முதல் (4 ஆம் பக்கம் பார்க்க)

# சபாநாயகரைப் பதவி விலக எதிர்க்கட்சிகள் கோரிக்கை

## பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

சபாநாயகர் எம். எச். முகமட் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் தாக்கல் செய்தார். ஜனாதிபதி பிரேமதாசா மீதான குற்றப் பிரேரணை மனுவை நிராகரித்ததன் மூலம் எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையை சபாநாயகர் இழந்துவிட்டமையால் அவர் உடன் பதவி விலகவேண்டும் எனவும் சிறிமாவோ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீதான குற்றச்சாட்டு மனுவில் உள்ள கையொப்பங்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பு செல்லுபடியாகும் என்று கருதப்பட்டு வந்தன திடீரென்று இவை செல்லுபடியாகாது போன மர்மம் என்னவென்று விளக்கும் பொறுப்பு சபாநாயகருக்கு இருக்கிறது என்று எதிர்க்கட்சியினர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார்கள்.

சபாநாயகர் எம். எச். முகமட் பாராளுமன்ற உறுப்பினர்கள் தகுதியைச் சந்தேகிக்கின்றார் என்றும் போலிக் கையெழுத்துக்களையா நாம் அளித்தோம் என்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா கேள்வி எழுப்பினார்.

இதுவரை காலமும் நியாயமாக, நடுநிலையாக நடந்து வந்த சபாநாயகர் எம். எச். முகமட் இப்போது எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையை இழந்து விட்டார் எனவே அவர் தொடர்ந்தும் பதவியில் இருக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா (4ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை

## விவாதத்தை இன்று நடத்த அரசாங்க கட்சி விருப்பம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் ஏற்கனவே திட்டமிடப்பட்டதன்படி பாராளுமன்றத்தில் இன்று ஆரம்பமாகாது என தெரிவிக்கப்படுகிறது.

சாங்க பாராளுமன்றக் குழு அறிவித்துள்ளது.

அத்துடன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களிப்பது என்றும் இந்தக் குழு அறிவித்துள்ளது.

## விவாதத்தை ஒத்திவைக்க எதிர்க்கட்சி கோரிக்கை

## சிறிலங்கா அரசியலில் புதிய திருப்பம்

(கொழும்பு)

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதாக எதிர்க்கட்சிகள் முடிவெடுத்திருப்பதை அடுத்து ஆறுவாரகால அரசியல் நிலைமையில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிரான குற்றச்சாட்டு மனுவில் இடப்பட்டிருக்கும் கையெழுத்துக்கள் பொய்யானவையா இல்லையா என்பதைத் தீர்மானிக்க பாராளுமன்றக் குழு ஒன்றை நிய (4ஆம் பக்கம் பார்க்க)

## குற்றப்பிரேரணை நிராகரிப்பு

## உத்தியோக பூர்வமாக சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை தாம் நிராகரிப்பதாக சபாநாயகர் எம். எச். முகமட் அறிவித்துள்ளார்.

நேற்றுக்காலை பாராளுமன்றம் கூடியபோது இதனை சபாநாயகர் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

பிரேரணையில் உள்ள கையொப்பங்கள் செல்லுபடியானதா என்ற சந்தேகம் தனக்கு ஏற்பட்டுள்ளதால் இதனை (4ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகள் கலாட்டா பாரா. மன்றம் ஒத்திவைப்பு

சபாநாயகர் எம். எச்.

இற்றைக் கூட்டத் தொடரின்

## முகமட் பதவி விலகுவதை அரசாங்கம் விரும்பவில்லை

(கொழும்பு)

எதிர்க் கட்சிகள் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்ததைத் தொடர்ந்து சபாநாயகர் எம். எச். முகமட் தமது பதவியை இராஜினாமாச் செய்ய முன்வந்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

ஆனால் சபாநாயகரை அப்படியான ஒரு முடிவு எடுக்க வேண்டாம் என ஆளும் கட்சியினர் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சபாநாயகரின் தீர்ப்பு கின்னசில் பதியவேண்டியது

-லலித்

அதிர்ச்சியூட்டும் நடவடிக்கைக்காக இது உலகப் புகழ் பெற்ற கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்படவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார்.

ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணை மனுவை நிராகரித்து சபாநாயகர் எம். எச். முகமட் தீர்ப்பு அளித்ததை குறித்தே லலித் அத்துலத் முதலி இவ்வாறு தெரிவித்தார்.

## உயிருக்கு அஞ்சி வாக்களிக்க தயக்கம்

- சிறிமாவோ

ஆளும் கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியடையுமா என்று எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் கேட்டபோது ஆளுங் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினரோடு இணைந்து வாக்களிக்க விரும்புகிறார்கள். ஆனால் தமது உயிருக்கு அஞ்சி வெளிப்படையான வாக்கெடுப்பில் பங்கு கொள்ளத் தயங்குகிறார்கள் என்று அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதித்தேர்தலில்

## மீண்டும் ஒரு முறை வென்றதுபோல் உள்ளது

- பிரேமதாசா

சபாநாயகர் உண்மையில் தைரியமாகச் செயற்பட்டுள்ளார் என்றும் குற்றச்சாட்டு மனுவில் இருந்து தான் மீண்டது இரண்டாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றது போன்றதாகும் என்றும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தன் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்.

சபாநாயகர் அரசியல் குற்றப் பிரேரணையை நிராகரித்த பின்னர் அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசிய பிரேமதாசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

...கும் என்று கருதப்பட்டு வந்தன திடீரென்று இவை செல் ... மாநாடு ஒன்றில் தெரிவித்தார்கள்.

### நம்பிக்கையில்லாப் பிரேரணை

## விவாதத்தை இன்று நடத்த அரசாங்க கட்சி விருப்பம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் ஏற்கனவே திட்டமிடப்பட்டதன்படி பாராளுமன்றத்தில் இன்று ஆரம்பமாகாது என தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இன்று கூடவுள்ள பாராளுமன்ற அமர்வு ஒழுங்குப் பத்திரத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முதல் நிகழ்ச்சியாக இடம் பெறச் செய்ய வேண்டும் என அரசாங்க பாராளுமன்றக் குழு அறிவித்துள்ளது.

அத்துடன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களிப்பது என்றும் இந்தக் குழு அறிவித்துள்ளது.

...களையா நாம் அறிந்தோம் என்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா கேள்வி எழுப்பினார்.

இதுவரை காலமும் நியாயமாக, நடுநிலையாக நடந்து வந்த சபாநாயகர் எம். எச். முகமட் இப்போது எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையை இழந்து விட்டார் எனவே அவர் தொடர்ந்தும் பதவியில் இருக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா

(4ஆம் பக்கம் பார்க்க)

## விவாதத்தை ஒத்திவைக்க எதிர்க்கட்சி கோரிக்கை

பாராளுமன்றம் இன்று காலை கூடும்போது அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அரசு தரப்பு கோரியுள்ளது.

ஆனால் பிரேரணையைச் சமர்ப்பித்த எதிர்க்கட்சிகள் இந்த விவாதத்தை நடத்துவதற்கு ஐந்து நாள் ஒதுக்க வேண்டுமென்றும், இந்த மாதக் கடைசிவரை விவாதம் ஒத்தி வைக்கப்பட வேண்டுமென்று கோரியுள்ளன.

அத்துடன் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையா அல்லது சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகரின் தயக்கம்; கொழும்பில் பல வதந்திகள்

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீதான குற்றச்சாட்டு மனுவின் ஆரம்பகாலத்தில் அதனோடு தொடர்பு கொண்டிருந்த சபாநாயகர் எம். எச். முகமட் இப்போது தயக்கம் கொள்வதின் காரணம் என்ன என்பது பற்றி கொழும்பில் பல வேறு விதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

# நாட்டில்குழப்பத்தைஉண்டுபண்ண சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள்

- பிரேமதாசா

(கொழும்பு)

"பாராளுமன்ற உறுப்பினர்களையும், மக்களையும் தவறான வழியில் இட்டுச் செல்வதற்கும், நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ணுவதற்கும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன" என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்:

நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாரதூரமான குற்றச்சாட்டுக்களை கொண்டிருக்கவில்லை. அரசாங்க தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய வகையிலேயே அவை வரையப்பட்டுள்ளன.

இதில் ஜனாதிபதிக்கு எதிரான எந்தவிதகுற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை. ஆனால் இது அரசாங்கத்தின் மீது பாரியகுற்றச்சாட்டுக்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## உத்தியோக பூர்வமாக சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை தாம் நிராகரிப்பதாக சபாநாயகர் எம். எச். முகமட் அறிவித்துள்ளார்.

நேற்றுக்காலை பாராளுமன்றம் கூடியபோது இதனை சபாநாயகர் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

பிரேரணையில் உள்ள கையொப்பங்கள் செல்லுபடியானதா என்ற சந்தேகம்தனக்கு ஏற்பட்டுள்ளதால் இதனை

(4ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகள் கலாட்டா பாரா. மன்றம் ஒத்திவைப்பு

சபாநாயகர் எம். எச். முகமட்டின் அறிவிப்பை தொடர்ந்து பாராளுமன்றத்தில் கூச்சல்களினாலும், ஏற்பட்ட குழப்பங்களினாலும் கூட்ட அமர்வை ஒத்திவைப்பதாக எம். எச். முகமட் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத் தொடரின் அமர்வு இன்று நடைபெறும் என்றும், எதிர்க்கட்சிகள் கூச்சலிட்டுக் குழப்பியதுடன், ஒழுங்கற்ற முறையிலும் நடந்து கொண்டார்கள் என்றும் எம். எச். முகமட் தெரிவித்தார்.

## சபாநாயகருக்கு ரூ. 10 கோடி

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிரான குற்றச்சாட்டு மனுவை நிராகரிக்க வேண்டும் என்பதற்காக சபாநாயகர் எம். எச். முகமட்டுக்கு ரூபா 10 கோடி பணம் வழங்கப்பட்டுள்ளதாக ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதென சபையில் எதிர்க்கட்சி மூத்த உறுப்பினர் ஒருவர் கூறினார்.

## பாடநூல் தயாரிப்பு

ஆண்டு 9 வரலாற்று பாடநூல் தயாரிப்பு வேலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (14-10-91) யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளதால் சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரையும் அன்றைய தினம் வருமாறு சமூகக்கல்வி இணைப்பு அதிகாரி கேட்டுள்ளார்.

### ஜனாதிபதித்தேர்தலில்

## மீண்டும் ஒரு முறை வென்றதுபோல் உள்ளது

- பிரேமதாசா

சபாநாயகர் உண்மையில் தைரியமாகச் செயற்பட்டுள்ளார் என்றும் குற்றச்சாட்டு மனுவில் இருந்து தான் மீண்டது இரண்டாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றது போன்றதாகும் என்றும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தன் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்.

சபாநாயகர் அரசியல் குற்றப் பிரேரணையை நிராகரித்த பின்னர் அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசிய பிரேமதாசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## புளொட்டின் சூட்டிற்கு தாண்டிகுளத்தில் 2 பேர்பலி

வவுனியாவிற்கு தாண்டிக்குளம் இராணுவத்தடைமுகாமிற்கு ஊடாகச் சென்றவர்கள் மீது புளொட் இயக்கத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து உள்ளனர். இத் தாக்குதலில் இருவர் பலியாகியுள்ளனர்; என்றும் ஒருவர் தப்பி விட்டதாகவும் தெரியவந்துள்ளது.

### ஈழத்தமிழருக்காக மட்டுமல்ல;

# உலகத்தமிழர் கௌரவத்திற்காகவும் தலைவர் பிரபாகரன் போராடுகிறார்

- தமிழேந்தி

(வட்டுக்கோட்டை)

ஈழத்தமிழினத்தின் விடுதலைக்காக மட்டும் எமது தலைவர் பிரபாகரன் போராடவில்லை. அவர் உலகிலுள்ள தமிழ்ச் சமுதாயம் முழுவதும் அடிமைத்தனமற்ற ஒரு சுதந்திர இனமாக தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமென்ற விருப்பத்துடன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றார்.

இவ்வாறு அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போர்க்காலகருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர் திரு தமிழேந்தி கூறினார்.

அராலி கிராமியப் பொறுப்பாளர் டயஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் 1972 ஆம் ஆண்டு தமிழ்ப்புலிகள் என்ற பெயருடன் ஆரம்பித்த தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் இன்று தலைவர் பிரபாகரனின் தலைமையின்கீழ் எழுச்சிமிக்கசுதந்திரப் போராட்டமாக பரிணமித்து நமது தமிழீழமண் படிப்படியாக மீட்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான நமது மக்களாணை பெற்ற எழுச்சி மிக்க சுதந்திரப் போராட்டத்தை நசுக்குவதற்கு சிறிலங்கா அரசு முப்படைகளுக்குமாக வருடா வருடம் ஆயிரம் கோடி ரூபாவிற்குமேல் செலவு செய்கிறது. இதற்கு ஈடு கொடுத்து நமது விடுதலையை வென்றெடுக்க தமிழீழ மீட்பு நிதிக்கு உங்கள் பங்களிப்பினை வாரி வழங்க முன்வரவேண்டும்.

இன்று விடுதலைப் புலிகளுக்கு ஏற்படும் இழப்புக்கள் வெறுமனே விடுதலைப்புலிகளுக்கு மட்டும் ஏற்படும் இழப்புக்களல்ல அது தமிழீழத்திற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

570693093V இலக்க அடையாள அட்டையும் வவுனியாவுக்கான பாஸும் உடுப்புகள் அடங்கிய பையை (பிளாஸ்ரிக்வயர்பாக்) யுடன் பழைய முருகண்டிக்கும் புதிய முருகண்டிக்கும் இடையில் 5-10-91இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஓமந்தை வட்டச் செயலகத்தில் அல்லது இரணைமடுச்சந்தி உதயா கபே குமார் வசம் ஒப்படைக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். கதிரவேலு கணேஸ்வரன்.

(R/1822)

### தேவை

வேப்பம் விதை, இலுப்பை விதை வாங்குகிறோம். மிக்கவைற், யாழ்ப்பாணம்.

(B/3264)

### ஜீவிதா

தொழில் நுட்பக் கூடம்

ரீ வி டெக், றேடியோ, மணிக்கூடு, மின்வண்டி மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும் வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும். புதிய பழைய பாடல்களும் (புரட்சிப் பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடம் சந்தி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(B/3094)

### கூட்டுறவுச் சமாச பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறுமென்று மாவட்ட செயலாளர் திரு ஏ. எம். ராஜகுமார் அறிவித்துள்ளார்.

இப்பொதுக் கூட்டம் யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலையில் தலைவர் திரு. ச. குகனேசன் தலைமையில் நடைபெறும். (24)

### 93 A/L

★ விஞ்ஞானபாடங்கள் மட்டும்

ஆரம்பம்

19 - 10 - 1991

(சனி காலை 7 மணி)

★ எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

★ மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்

---

## பாரதிதாசன் கல்வி நிறுவனம் (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### A L 91

பொருளியல்

S. வரதராஜன்

★ வரவு செலவுத் திட்டம்
★ இலங்கையின் சனத்தொகை
★ இலங்கையின் வேலையின்மை
★ விவசாயத்துறையின் அபிவிருத்தி
★ கிராமியக் கொடுகடன்
★ இலங்கையின் கைத்தொழில்
★ பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி

ஆரம்பம்:

12.10.91

11.00 A.M

(B-3281)

❋ மேற்குறிப்பிடப்பட்ட பாடப்பகுதிகள் முழுமையாகக் கற்பிக்கப்படும்

❋ வினா—விடை வகுப்புக்கள் இலவசமாக நடைபெறும்

---

## AL 93

### கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள்

★ அனுமதிகள் யாவும் இன்று பி.ப 4.00 மணியில் இருந்து வழங்கப்படும்.

★ முன்கூட்டியே அனுமதி பெறுபவர்களுக்கான வகுப்புகள் யாவும் 19-10-91 (சனி) ஆரம்பமாகும்.

இதே பந்தியில் கூடிய விபரங்கள் குறுகிய காலத்தில் எதிர்பாருங்கள்!!!

### யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(B/3258)

---

## யாழ் ஸ்ரீதர் திரையரங்கில்

### மாங்குளம் தகர்ப்பு

(விவரணப் படம்)

### இனியொரு விதி

(குறும்படம்)

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாகக் காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்)

சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

(B/3284)

---

## 91-ம் நாள் நினைவஞ்சலி



---

## பதவி வெற்றிடங்கள்

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு. 25-11-1981-ம் திகதிய சுற்றறிக்கை இல. 108/81-ல் குறித்துள்ள தகைமைகளை உடையவர்களிடமிருந்து கீழ்க்காண் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு பதவிக்கும் தனியான விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் "பொது முகாமையாளர், கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கம், கரவெட்டி" என்ற விலாசத்திற்கு, 22-10-91க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்

| பதவிகள் | சம்பளத் திட்டம், 30/06/88-ந் திகதிய கூ.வே.ஆ குழு சுற்று நிருபம் இல. 165/88ன்படி |
|---|---|
| 1. கணக்காளர் | — 09. |
| 2. வர்த்தகமுகாமையாளர் | — 09. |
| 3. வங்கி சேவைகள் முகாமையாளர் | — 12. |
| 4. உள்துறை எஸ்பார்வையாளர் | — 09. |

விண்ணப்பங்களுக்கும், கல்வித்தகைமைகளுக்கும் சங்க அலுவலக நேரத்தில் பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

எம். தம்பிராசா

பொதுமுகாமையாளர்.

(B/3276)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



---

## நினைவு கூருகின்றோம்...

1991 - 10 - 09



2ஆம் லெப்.

சிவா

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் கைதடி வண்ணாத்திப் பாலத்தில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய கைதடி பிரதேசப் பொறுப்பாளர்

**2ஆம்லெப்.சிவா** (குப்புசாமி சிவஸ்ரீதரன்-கைதடி, சாவகச்சேரி)

மட்டக்களப்பில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்ட தமிழ் மாணவன்

1989ஆம் ஆண்டு பளையில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1990ஆம் ஆண்டு திருக்கோணமலை - வேப்பங்குளம், 10ஆம் கட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

சங்கர் (நா. மோகனசுந்தரம் - அன்புவழிபுரம், திருகோணமலை)

இந்துமன்ற ஆரம்பப் பாட
சாலையில் தலைவர் திரு.
ச குகனேசன் தலைமையில்
நடைபெறும். (24)


## 93 A/L

★ விஞ்ஞானபாடங்கள்
மட்டும்
ஆரம்பம்
19 - 10 - 1991
(சனி காலை 7 மணி)

★ எமது வழமையான
ஆசிரியர்
குழுவினால்

★ மாணவர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்கள் இடத்தை உறுதி செய்து கொள்ளவும்.

NEW
MASTER
INSTITUTE
Jaffna

(B-3280)



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

A/L 93

ஆரம்பம்: 19-10-91
(8 மணி)

[100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்]

நிர்வாகி
S. அருள்நங்கை

(B/8270)




## கப்டன் லீமா
(இராசேந்திரம் கௌரி)

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 16-09-1971 | 11-07-1991 |

மண்ணினை மீட்டிட மன்பதை எழுந்தது
வீரர்கள் வீரிகள் துவக்கைத் தூக்கினர்
துட்டரைத் துரத்திடும் பெண்புலி அணிக்கு
தலைமையாய் நின்றாள் லீமா என்றவள்
எதிரியைத் தாக்கிப் பலரைக் கொன்று
அறப்போர் புரிந்து புறமுதுகிடாமல்
ஆனையிறவில் இன்னுயிர் நீத்த
எங்கள் செல்வி அருந்தமிழ்ப் புதல்வி
வரலாற்றேட்டின் வரைபடமானாள்!

வீரமரணமடைந்த அனைத்துப் போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள், 09-10-91 இன்று புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்படி உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இந்திரன் அம்மன் கோயில் வீதி,
தன்னாலை வடக்கு,
கரவெட்டி.

பெற்றோர்
சகோதர சகோதரிகள்

(R/1821)

4. உள்துறை எஞ்சினியர் ...

விண்ணப்பங்களுக்கும், கல்வித்தகைமைகளுக்கும் சங்க அலுவலக நேரத்தில் பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

எம். தம்பிராசா
பொதுமுகாமையாளர்.

(B/3276)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
27-06-1973

தமிழீழ மண்ணில்
20-09-1990

திதி:- 09-10-1991

### வீரவேங்கை கண்ணன்
(கனகசபாபதி பரமானந்தன்)

சித்திரை நிலவு - எமைவிட்டுச்
சென்றதால் இன்று
நித்திரையில் கூட
நெஞ்சு கொதிக்கிறது!
இத்தரையின் விடிவுக்கு
எம் குயிலின் இளங்குருதி
புத்திளமையோடு பொங்கிப்
பாய்ந்தது! வரலாற்றுப்
புத்தகத்தில் உன்பெயரைப்
பொறித்த எம் கண்ணனே!
எத்தனை ஆண்டுகள் நாம்
உன் நினைவை...
இரை மீட்டிப் பார்த்தாலும்
சத்தியமாய் எமக்குச்
சலிக்காது -- மண்மீட்பில்
முத்திரையைப் பொறித்தவனே
உன் நாமம் வாழி!

குடும்பத்தினர்.

(R/1814)

மேற்கொண்ட தாக்குதலின் போது காயமுற்ற நிலையில்
சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய
கைதடி பிரதேசப் பொறுப்பாளர்

**2ஆம்லெவ்.சிவா** (குப்புசாமி சிவஸ்ரீதரன்-கைதடி, சாவகச்சேரி)

மட்டக்களப்பில் இந்தியப்படையினரால் கைது
செய்யப்பட்டு முகாமில் வைத்து படுகொலை
செய்யப்பட்ட தமிழ் மாணவன்

1989 ஆம் ஆண்டு பளையில் தேசவிரோதிகளால்
சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1990 ஆம் ஆண்டு திருக்கோணமலை - வேப்பங்குளம்,
10ஆம் கட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினர்
பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில்
வீரமரணமெய்திய

**சங்கர்** (நா. மோகனசுந்தரம் - அன்புவழிபுரம், திருக்கோணமலை)

முல்லைத்தீவில் சிறிலங்காப்படையினருடனான நேரடி
மோதலில் வீரமரணமெய்திய

**லோகநாதன்** (கந்தையா பார்த்தீபன் - நீராவை, கபறணை)

**கோகிலன்** (பொன்னையா கனகலிங்கம் - மருதன்)

கடவானையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட
வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

**றாம்கி** (நடராசா புலேந்திரராசா 234, 2ஆம் யுனிற், கந்தளாய்)

**அஜித்** (கணபதிப்பிள்ளை கருணாகரன் - 5ஆம் வட்டாரம், ஈச்சந்தீவு)

**றொபின்சன்** (கனகசுந்தரம் குகன் - மணற்சேனை)

வெல்லாவெளியில் சிறிலங்காப் படையினருடனான
நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**சர்வா** (பாலசிங்கம் திருக்குமாரராசா - வன்னேரிக்குளம்)

மணலாறில் சிறிலங்காப் படையினருடனான நேரடி
மோதலில் வீரமரணமெய்திய

**2ஆம்லெப்.தரன்** (காராளசிங்கம் ஈஸ்வரன் - நெடுங்கேணி)

ஆகியோரை இந்நாளில் நினைவு
கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/8279)

✲ சிந்தனைக்கு ✲

நிகழ்காலம், கடந்த காலம், இரண்டும்,
எதிர்காலத்தில் அடங்கியிருக்கக் கூடும்.

— டி எஸ் ஈலியட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 09-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# தோல்வியில் முடிந்த "ஜனநாயகச்" சதி

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட அரசியல் குற்ற விசாரணை கோரும் மனுவை சபாநாயகர் எம். எச். முகமட் நிராகரித்துவிட்டார். இம்மனுவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கான போதிய பலம் இல்லை என்பதே சபாநாயகர் நிராகரித்தமைக்கான காரணமாகும்.

இந்த நிராகரிப்பின் மூலம் திரு. பிரேமதாசாவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு "ஜனநாயக ரீதியாக" மேற்கொள்ளப்பட்ட சதிப் புரட்சி ஒன்று தோல்வி அடைந்துள்ளது என்றே சொல்லுதல் வேண்டும்.

சிறிலங்கா ஜனாதிபதி ஒருவர் மீது ஓர் குற்றப் பிரேரணை மனுவைக் கொண்டு வந்து அவரைப் பதவியில் இருந்து அகற்றுதல் என்பது நீண்ட ஒரு நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கை வெற்றி பெறாது என முன்னரே தெரிவிக்கப்பட்டும் இருந்தது. இது அதிருப்தியாளருக்கும் ஓரளவு தெரிந்திருக்கும்.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்தது, குற்ற விசாரணை மனுவை விவாதத்திற்குக் கொண்டு வந்து அதன் மூலம், திரு. பிரேமதாசா மீதான அவநம்பிக்கையை மக்கள் மத்தியிலும், எம். பிக்கள் மத்தியிலும் ஏற்படுத்தி ஐ.தே. கட்சி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதும், அதன் மூலம் தொல்லை கொடுத்து திரு. பிரேமதாசாவை பதவியில் இருந்து விலகச் செய்வதுமேயாகும்.

ஆனால், குற்றவிசாரணை மனுவைச் சபாநாயகர் ரத்துச் செய்வார் என எதிர்க்கட்சியினரோ, அல்லது அதிருப்தியாளர்களோ எதிர்பார்க்கவில்லை என்பது மட்டும் உண்மை. குற்றவிசாரணை மனு தொடர்பாக ஆரம்பத்தில் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் சபாநாயகருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் குற்றவிசாரணை மனு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற கருத்தையே உருவாக்கியிருந்தன. ஆனால், சபாநாயகரின் இத்திடீர் அறிவிப்பு, எதிர்க்கட்சியினரையும், அதிருப்தியாளர்களையும் ஆச்சரியப்பட வைத்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லைதான்.

குற்ற விசாரணை மனு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாமையினால், திரு. பிரேமதாசாவின் கை சற்று தற்பொழுது ஓங்கியுள்ளது இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்...

# விரிவுரைகளின் விளக்கக் குறியீடு கப்டன் அஜித்தா

அடர்ந்த காடு. பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர் புதிய போராளிகள். பயிற்சிக்காக வழங்கப்படும் துப்பாக்கிகளை வைத்துவிட்டு அசட்டையாக ஒரு நிமிடம் நின்று விட்டால் திரும்பிப் பார்க்க துப்பாக்கி இருக்காது. அநேகமாக எல்லோருக்கும் தெரியும் "அஜித்தாக்கா தான் எடுத்திருப்பா" என்பார்கள். "இன்று இந்த துப்பாக்கியில் இருக்கும் கவனயீனம் தான் நாளை எமது போராளிகள் உயிரைக் கொடுத்தெடுத்த துப்பாக்கிகளிலும் இருக்கும். அவர்களின்ரை உயிர்கள் தான் இந்தத் துப்பாக்கிகள். ஆனபடியால் அவற்றை எங்கடை உயிரைவிட மேலாக நினைக்க வேண்டும். கவனமாக அவற்றை நேசித்தபடி வைத்திருக்க வேண்டும்" என்று கூறி திரும்பவும் தருவா.

இந்தக் காலத்தில் தான் எங்களுடைய பாசறை அமைந்திருக்கும் பகுதி ஒரு சிறு அழகான குடியேற்றமாக அற்புதமான பூஞ்சோலையாக மாறிக் கொண்டிருக்கிறது. ஒரு பாதையைச் சுற்றி எமது வாசஸ்தலங்களாக சாக்குக் கொட்டில்கள். அந்தக் கொட்டில்களுக்கு இடையில் ஒன்று வித்தியாசமாக தனித்து சென்று ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் ஒழுங்காக நேர்த்தியாக அடுக்கப்பட்டிருக்கும். அந்தக் குழுவுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகள் யாவும் நேர்த்தியாக செய்து முடிக்கப்பட்டிருக்கும் அல்லது சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கும். பார்த்த உடனேயே பட்டென்று சொல்லி விடலாம் அது அஜித்தாவின் குழு என்று.

அந்த அளவிற்கு வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டுமென்றும் எந்தளவு கெதியாக வேலைகளைச் செய்கிறோமோ அந்தளவிற்கு இயக்கத்தின் வளர்ச்சி. போராட்ட வளர்ச்சி விரைவு பெறும் என்பதும் தரப்படுகின்ற வேலைகளை மகிழ்வுடன் ஏற்றுச் செய்ய வேண்டும் என்பதும் அஜித்தாவினுடைய விரிவுரைகளாயிருக்கும் விரிவுரைகளுக்கு மட்டுமல்ல அஜித்தா அந்த விரிவுரைகளுக்கு விளக்கக் குறியீடாகவும் இருந்தவள்.

அஜித்தா இந்தப் போராட்டத்திற்கு காலடி எடுத்து வைத்ததகாலகட்டம் வித்தியாசமானது. பெண்கள் தாமும் தமது குடும்பமும் வீட்டு வேலைகளும் தான் உலகம்

இந்த மண்ணில் இருந்து எதிரியை வீழ்த்தும் துப்பாக்கிகளில் தனது துப்பாக்கியும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று வந்தவளுக்கு ஆதிக்கம் அடிபணிய வைக்கும் ஒப்பந்தத்தைத் திணித்தது கண்டு கொதித்தாள். எரிமலைகளுக்கு முன்னால் இந்த ஒப்பந்தம் எத்தனை நாளைக்கு நின்று பிடிக்கும்? சில மாதங்களின் பின்னால் எமது அனுமதியின்றி இந்த மண்ணில் எந்த அந்நியனும் நுழையமுடியாது.

பெண் போராளிகளும் அணிந்திருந்தது அஜித்தா தைத்த உடுப்புத்தான். இரவு, பகல் என்று எந்த வித்தியாசமும் அவளுக்கில்லை அவ்வளவிற்கு வேலை. இல்லை, அந்தளவிற்கு அவளின் கடமை உணர்வு அவளை ஆட்கொண்டிருந்தது. அண்ணாவும் அவளுக்குப் பக்கத்தில் - முகாம் பொறுப்பில் இருந்து பல முக்கிய பொறுப்புக்கள் அவளுக்கு.

அவள் அடிக்கடி கூறுவாள் "அறியாமல் கூட நான் தவறு செய்யக்கூடாது. அப்படித் தவறு விட்டால் நான் தண்டனை பெறும்போது அது அண்ணாவுக்கு அவமானம்" என்று எந்தப் பிள்ளையையும்

பலம் வாய்ந்த எதிரியும் பலம் வாய்ந்த கோட்டை மதில்களைச் சுற்றியும் மூர்க்க யுத்தம் நடாத்தினதில் ஒரு அணிக்கு அஜித்தாவின் தலைமை பொறுப்பேற்கின்றது.

அப்போதெல்லாம் 'அவ்ரோ'வும் பொம்மர் விமானங்களும் குண்டுகளை வீச இன்னொரு விமானம் உணவுகளைப் போடும், இவற்றுக்கு மத்தியில் வீரசிங்கம் மண்டபத்தில் 5 ஆவது மாடியில் அஜித்தா எல். எம். ஜி. உடன் நிற்பாள் கோட்டைக்குள்ளே சில பார்சல்கள் விழ அதை எடுக்க ஓடி வரும் இராணுவத்தினர் அந்த இடத்திலேயே விறைத்து விடுவார்கள். கோட்டை முகாமைத் தாக்கி அழிக்கும் முயற்சி ஒன்றிலும் அவள் தலைமை ஏற்ற குழுவுடன் சென்றாள். முற்றுகைப் போருக்கு முகம் கொடுக்க முடியாத இராணுவம் பின்பக்கத்தால் ஓடியது. கோட்டையில் இன்று புலிக் கொடி பறக்கின்றது.

ஒய்விற்கு அவளுக்கு அவகாசம் இல்லை அவளை இராணுவம் வெளியேறிய போது ஒப்பினாள், கட்டுவன் பகுதிகளில் அவள் துப்பாக்கி முழங்குகிறது. கடுவெளிக்கு எதிரியை மறித்து நிலைகளை அமைத்துக் காவல் கடமையைத் தொடர்ந்தாள்.

25 அல்லது 50 யார் தூரத்தில் இருக்கும் இராணுவ

அப்படி நுழைய முடியுமென்றால் அது எமது பிணங்களுக்கு மேலால்தான் என்று எமது பொறுப்பாளர் கூறி "இதற்கு நீங்கள் தயார் என்றால் எம்முடன் வருங்கள்" என்றபோது அஜித்தா சொல்லாமல் சொன்னாமலே வாகனத்தில் ஏறிவிட்டாள்.

சண்டை ஆரம்பித்து விட்டது. யாழ். மருத்துவ பீடத்தில் இறக்கப்பட்ட இந்திய இராணுவம் அனைத்தும் சடலங்களாக சமைந்து போயின. இதில் பெண் போராளிக்குழுக்கள் பெரும் பங்கினை வகித்தன அங்கே சடசடத்த துப்பாக்கிகளில் அஜித்தாவின் துப்பாக்கியும் ஒன்று வீழ்த்தப்பட்ட எதிரிகளின் எண்ணிக்கையில் அவளுக்கும் பங்குண்டு. பலத்த எதிர்ப்புகளுக்கும் இழப்புகளுக்கும் மத்தியில் எமது மக்களின் உடல்களை ஏறிமிதித்தபடி அங்குல அங்குலமாக முன்னேறியது இந்திய இராணுவம். புற்றீசல் போல் புறப்பட்டவர்களை புலிப்படை



கப்டன் அஜித்தா

பொசுக்கியது. ஆனைக்...

அன்பாகத்தான் அணைப்பாள். ஆனால் கூடவே கண்டிப்பும். தவறுகளுக்கான தண்டனைகளை வழங்கிவிட்டுபின் கூப்பிட்டு ஆறுதலாக அந்தத் தவறுகள் இனிமேல் விடக்கூடாது என்றும் அதற்காகத்தான் தண்டனையைத் தந்தேன் என்றும் மிக நீண்ட விரிவுரை. ஆம்! அவள் மகளிர் படைப்பிரிவைப் பொறுத்தவரையில் ஒரு பேராசிரியர் தான்

அன்று எல்லாம் அழுகை

யாகத்தான். ஆனால் அஜித்தா மட்டும் விம்முகின்றாள் ஆற்ற முடியாத அழுகை: எவராலுமே கட்டுப்படுத்த முடியவில்லை. எல்லோருமே அப்படி அப்படியே உறைந்து போனார்கள். முகாமிலுள்ள அத்தனை பேரும ஒன்றுகூடிய ஒரு கருத்துப் பரிமாற்றத்தின் பின் மெல்ல எல்லோரும் அதிர்ந்தவர்களாய்... அஜித்தாவின் அண்ணாவிற்கு இயக்கக் கட்டுப்பாட்டு விதிகளை மீறியமைக்காய் ... அதி உயர் தண்டனை. எந்த அண்ணனுக்காகதான் அறியாத தவறு ஒன்றுக்காகக்கூட தண்டனை பெறக்கூடாது என்று இருந்தாளோ அந்த அண்ணன் தெரிந்துவிட்ட குற்றத்திற்காக தண்டனை! அவள அழுததெல்லாம் அண்ணன் இயக்கத்தின் நம்பிக்கைக்குத் துரோகம் செய்து விட்டான் என்ற ஆத்திரத்தாலும் அவமானத்தினாலும்தான். அந்தத் தண்டனையைத் தான் வழங்கப் போவதாகக் கேட்கிறாள். ஆனால் இயக்கம் மறுத்துவிட்டது அவளின் விசுவாசத்திற்கு முன்னால் நாங்கள் வியந்துப்...

நிலைகளை அறிய வேண்டும்' அவர்களின் நடமாட்டங்களை அறியவேண்டும். முகாம் பலப்படுத்தும் அல்லது விஸ்தரிக்கும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த வேலைகளின் போது அவள் முன்னால் சென்ற பின்பே பிள்ளைகள் பின்னால் செல்லவேண்டும் எமது நிலைகளுக்கு முன்னால் சென்று - அவர்களின் நிலைகளுக்கு கிட்டவாக அவள் துப்பாக்கி சத்தமிடும். எந்தப் போராளியும் அவளுக்குத் தெரியாமல் முன்னால் போக முடியாது அவளுக்குத் தெரிவித்து அவள் நிற்கையில் தான் முன்னால் போகவேண்டும் இது அவளின் இறுக்கமான கட்டளை.

அஜித்தா என்றால் அனைவருக்கும் அன்பு நிறைந்த பயம். அவளின் நடத்தையில் அன்பும் கண்டிப்பும் நிறைந்திருக்கும். "நாங்கள் ஒரு விடுதலை அமைப்பு. அதிலும் மிக மோசமான சமூக அழுத்தங்களில் இருந்து புறப்பட்டவர்கள் அடுத்த பரம்பரை. எம்மைப் பார்த்து எமக்குப்...

கொள்ளப்படாமையினால், திரு. பிரேமதாசாவின் கை சற்று தற்பொழுது ஓங்கியுள்ளது இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையும் தோல்வியுறுவதற்கான நிலையே உருவாகியும் உள்ளது.

இந்நிலையில் எதிர்க்கட்சியினரும், அதிருப்தியாளர்களும் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிரான நீண்டகாலப் 'போர்' ஒன்றிற்கே தயாராக வேண்டும். ஆனால், இந்த நீண்டகாலப் போரும் கடினமானதாகவே இருக்கும்.

மூன்றாம் உலக நாடு ஒன்றில், அரசாங்கத்தில் உள்ளவர்கள் தமது நலனுக்காக நாட்டின் வளம் அனைத்தையும் பயன்படுத்துவதனால், எதிரணியினர் வெற்றி பெறுவதென்பது இலகுவான காரியமாக இருக்காது.

இந்நிலையில், ஜனநாயக வழிமுறைகளை மீறிய போராட்ட வடிவங்களையும் எதிரணியினர் கடைப்பிடிக்க முற்படலாம். தற்பொழுதே இன வன்முறைக்கு தூபமிடும் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ள அதிருப்தியாளர்கள் இதனையே ஆட்சிக்கவிழ்ப்பிற்கான வழிமுறையாகவும் தொடரலாம்.

இதற்கு சிறிலங்காவின் கடந்தகால அரசியல் வளர்ச்சியும் இடமளிப்பதாகவே உள்ளது. ஜனநாயகரீதியான வரன்முறைகளை மீறிய செயற்பாடுகளைக்கொண்டதாக சிறிலங்கா ஆட்சி அமைப்பு மாறிப் பல வருடங்கள் கடந்து விட்டன. திடீர் அரசியல் அதிர்ச்சிகளும் மாற்றங்களும் எப்பொழுதும் ஏற்படலாம். இதனால் அரசியலின் போக்கும் திடீரென தலைகீழாக மாறலாம்.

---

வைத்தகாலகட்டப் வித்தியாசமானது. பெண்கள் தாமும் தமது குடும்பமும வீடு வேலைகளும் தான் உலகம் என்று எண்ணியிருந்த சமூக அமைப்புக்குள் இருந்து அந்தத் தளைகளை உடைத்து வெளியேற வேண்டிய காலம். யாழ். மாவட்டத்தில் இருந்து நேரடியாக ஆயுதப்பயிற்சிக்கு பெண்கள் அனுப்பப்படவில்லை ஆனாலும் இந்த சமூகத்தின் மாறுபட்ட பார்வைகளுக்கு மத்தியில் இந்தத் தேசத்திற்காக ஏதோ ஒரு வகையில் தன்னுடைய செயற்பாடுகள் அமையவேண்டும் என்பதனால் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினூடு தனது வேலைகளைச் செய்தாள்.

தொடர்ந்து கால ஓட்டத்தில் பெண்களுக்கான பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்டபோது அதில் அஜித்தாவும் ஒருத்தி. இயக்கத்தில் ஏற்கனவே ஒரு அண்ணா. மூடக் கொள்கையில் ஊறிப்போன சமுதாய அமைப்பு. அந்தச் சூழலில் இருந்து அஜித்தா இயக்கத்திற்கு வந்தமை அவள் விடுதலையை எந்த அளவிற்கு நேசித்தாள் என்பதனைப் புலப்படுத்தும்.

ஒழுங்கான பயிற்சி அப்போது எந்த வேளையிலும் ஓட்டத்தில் அஜித்தாதான் முதல். பயிற்சியை முடித்து

## கப்டன் அஜித்தா

பொசுக்கியது. ஆனைக்கோட்டை, தாவடி, தெல்லிப்பளை என இராணுவத்தை அஜித்தா எதிர்கொண்டாள். தெல்லிப்பளையில் இவளுக்கு மோசமான வயிற்றுளைவு; எழுந்து நடக்கவே முடியாது. திரும்பும் இடமெங்கும் ஆக்கிரமிப்பாளர்களின் துப்பாக்கிகள் குறிபார்த்தபடி. ஆனால் அவளின் உள்ளம் சோர்வடையவில்லை விடுதலைக்கு மட்டும்தான் அங்கே இடம் கிடைத்தது.

அஜித்தாவைப் பொறுத்தவரையில் வித்தியாசமான - கஷ்டங்கள் நிறைந்த - ஆனால் மகிழ்ச்சியான ஒரு புது வாழ்வை எதிர்கொண்டாள் அதுதான் அந்தக் காட்டு வாழ்க்கை அங்கே எங்களுக்கு எல்லாமே நாங்கள் தான். எமது தேவைகள் எல்லாவற்றையும் நாமேதான் பூர்த்தி செய்ய வேண்டும். உடுப்புத் தைப்பதில் இருந்து வெடிபொருட்கள், கண்ணிகள் உற்பத்திசெய்வது வரைக்கும் அஜித்தாவின் கை படிந்திருக்கும். அங்கிருந்த அனைத்துப்

தாகக் கேட்கிறாள். ஆனால் இயக்கம் மறுத்துவிட்டது அவளின் விசுவாசத்திற்கு முன்னால் நாங்கள் விக்கித்துப் போனோம்.

அதற்குப் பின்னால் இந்தத் துரோகத்தனத்தினால் உள்ளுக்குள் வெகுவாகப் பாதிக்கப்பட்டாலும் எதுவுமே நடக்காததுபோல் அமைதியாகிவிட்டாள் தொடர்ந்து தனது குழுவும் தன் வேலைகளுமாக முன்னையவிட இன்னும் தாய்மையைப் பேணுபவளாக .. ..

எமது மகளிர் படைப்பிரிவு புதிய போராளிகளை உள்வாங்கி விரிவடைகின்றபோது ஒரு படையணி நாட்டிற்கு வர அதற்குள் அஜித்தாவும் ஒரு குழுத்தலைவியாக வந்தாள்.

மூன்று வருடங்களுக்குப் பின்னால் பெற்றோரை இவள் சந்தித்தபோது இந்த நிகழ்வினை அவள் எப்படிச் சொன்னாள் என்பதெல்லாம் எமக்குத் தெரியாது ஆனால் ஒன்றுமட்டும் புரிகிறது. தாய்ப்பாசத்திற்கு முன்னால் அண்ணனின் நிலையினை தங்கை சொல்லும் போது அவள் உள்ளம் பலவிதமான உணர்வுகளைச் சந்தித்திருக்கும் என்பதுதான்.

நாட்டிற்கு வந்த கொஞ்சக் காலத்துக்குள்ளேயே வரலாற்று எதிரியுடன் மீண்டும் யுத்தத்தை நடாத்தினோம்.

தலை அமைப்பு. அதிலும் மிக மோசமான சமூக அழுத்தங்களில் இருந்து புறப்பட்டவர்கள் அடுத்த பரம்பரை. எம்மைப் பார்த்து எமக்குப் பின்னால் வரவேண்டும். ஆனபடியால் நாங்கள் ஒழுக்க சீலர்களாக, பண்பாடுள்ளவர்களாக, வீரமுள்ளவர்களாக மொத்தத்தில் தனித்துவமுள்ளவர்களாக வரவேண்டும்'' என்பன அவள் உதடுகள் அடிக்கடி உச்சரிக்கும் வசனங்கள்.

22-12-90 அன்று கட்டுவன் பகுதியில் இருந்த இவளது

**பாரதி**

பக்கமாக இராணுவம் முன்னேறுகிறது ஒரு குழுவுடன் நின்ற இவளுக்கு தகவல் வருகிறது மறுபக்கமாக எதிரி வெளியேறுகின்றான் என்று. ஓடிவந்து கட்டளைகளைப் பிறப்பித்து நிலை எடுத்து ஒவ்வொருவராகக் குறிபார்த்துச் சுடுகிறாள். ''இந்தா ஒருத்தன் .. ம் அடுத்தவன் ..'' எண்ணி எண்ணி அவதானமாகத்தான்... ''எந்த நிலையிலும் பதற்றப்படாது பரபரப்படையாது நிதானமாக இலக்குகள் வீண் போகாது அடிக்கவேண்டும்'' என்றவளின் துப்பாக்கி நிதானத்தை விட்டு மெல்லச் சரி

(4ஆம் பக்கம் பார்க்க)

# குரோசிய அதிபர் மாளிகை மீது யூக். விமானங்கள் குண்டுவீச்சு

(பெல்கிரட்)

குரோசியாவின் அதிபர் மாளிகைமீது யூக்கோ மத்திய இராணுவம் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளது. இத் தாக்குதலில் அதிபர் மாளிகை பலத்த சேதத்திற்கு உள்ளாகியது எனினும் குரோசிய அதிபர் டுச்மான், மற்றும் பிரதமர் போன்ற பல முக்கிய பிரமுகர்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

இதனிடையே யூக்கோஸ்லாவிய இராணுவம் தெரிவித்திருக்கும் புதிய யுத்த நிறுத்த யோசனைகளை ஏற்பதா இல்லையா என்பது குறித்து குரோசியத் தலைவர்கள் பரிசீலித்து வருகின்றனர். எனினும் நிபந்தனைகளை குரோசியா ஏற்றுக் கொள்ளாது என்று குரோசிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று மாதங்களாக இடம்பெற்று வரும் மோதல்களில் முதல் தடவையாக நேற்று முன் தினம் யூக்கோ விமானப்படை விமானங்கள் குரோசியத் தலைநகர் ஸாக்ரே மீது குண்டு மாரி பொழிந்தன. இதனால் தலைநகரிலிருந்த பல அரசாங்க அலுவலகக் கட்டடங்கள் சின்னாபின்னமாகியுள்ளன. 14 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஜனாதிபதி மாளிகையும் சுக்கு நூறாகியுள்ளது.

இதேவேளை ஐரோப்பிய பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த தலைவர்கள் யூகோஸ்லாவியாவில் சமாதானத்தை ஏற்படுத்த ஐ. நா சபை தலையிட வேண்டுமெனவும் ஐ நா. செயலாளர் விசேட தூதுவரை அனுப்ப வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### ப. நோ. கூ. ச. கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ப. நோ. கூ, சங்க. தெ. ப. பொ. உ. வி. கூ. சங்க, ஏனைய கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்கள், தொழிற் சங்க பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நாளை (10-10-91) காலை 10.00 மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் (மணியம் கட்டடம்) நடைபெறவுள்ளது.

எனவே இதில் தவறாது சமூகம் கொடுக்கும்படி யாழ். மாவட்ட கூட்டுறவுப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

சுழிபுரம் கண்ணன் குழுவினரின்

## கொள்ளைப் பொருள்கள் நாளை மீளளிப்பு

யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சுழிபுரம் கண்ணன் குழுவினரால் கொள்ளையிடப்பட்ட நகைகள் நாளை வியாழன் காலை 10.00மணிக்கு கோண்டாவில் செயலகத்தில் வைத்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

கடந்த பல வருடங்களாக விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி கண்ணன் தலைமையிலான இருபதுபேர் கொண்ட குழு ஆயுதபாணிகளாகச் சென்று மிழ்மக்களிடம் கொள்ளையிட்டு வந்ததும் சில மாதங்களுக்கு முன் இக்குழுவின் தலைவர் உட்பட பெரும்பாலானவர்கள் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டதுடன் கொள்ளையிடப்பட்டவற்றில் பெரும்பாலானவை மீட்கப்பட்டதுடன் கொள்ளைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் மீட்கப்பட்டது தெரிந்ததே.

நாளை இக்கொள்ளைக் குழுவினரிடமிருந்து விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட நகைகளே அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வளைகுடாப் போரினால்

# பாதிக்கப்பட்ட வெளிநாட்டவருக்கு நஷ்டஈடுத் தொகை நிர்ணயம்

ஈராக் அல்லது குவைத்தில் வளைகுடா யுத்தத்தின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க ஐக்கிய நாடுகள் நஷ்ட ஈடு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நஷ்டஈடுக் கொடுப்பனவுகளைக் கொடுப்பதற்கு சில காலம் பிடிக்கலாம். இதற்கான நிதி ஈராக் எண்ணெய் ஏற்றுமதிசெய்யும் வருமானத்திலிருந்துபெறப்பட இருப்பது இதற்கான காரணமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் அல்லது குவைத்தில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதிக்கும் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதிக்கும் இடையே வெளியேறியவர்களுக்கு நஷ்டஈடாக 2500 அமெரிக்க டாலர் வழங்கப்படவுள்ளது.

ஒரு குடும்பத்துக்குவழங்கப்படும் ஆகக்கூடியதான நஷ்டஈடுத் தொகை 5000 அமெரிக்க டாலராக இருக்கும்.

பலத்த காயத்துக்குள்ளானவர்களுக்கு 2500 டாலரும் மரணமடைந்திருப்பின் அது தொடர்பாக 2500 டாலரும் வழங்கப்படும் இது தொடர்பாக ஒரு தனிப்பட்ட குடும்பத்துக்கு வழங்கப்படும் ஆகக் கூடியதான நஷ்டஈடு 10000 டாலராக இருக்கும்.

காயமுற்ற அல்லது மரணமடைந்த தொடர்பான சான்றிதழ்கள் இந்தக் கொடுப்பனவுகளைப் பெறுதற்குப் போதுமானதாகும்.

வருமான இழப்பு, சொந்த உடைமை மருத்துவ செலவினங்கள் தொடர்பான கோரிக்கை ஒரு லட்சம் டாலர் வரைக்கும் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிக்க முடியும்.

குவைத்தில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்கும் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குமிடையே வெளியேறிய ஒருவர் 2500 டாலர் கோரிக்கையைத் தவிர வேறெந்தக் கோரிக்கை பெறுவதற்கும் உரிமையில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

2500 டாலர் நஷ்டஈடுத் தொகை 10000 டாலராக அதிகரிக்கப்பட வேண்டுமென்று சிறிலங்காவும் வேறு நாடுகளும் கோரியுள்ளன.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நஷ்டஈடுக் கொடுப்பனவு தொடர்பான படிவம் ஒன்றை ஏற்கனவே தயாரித்துள்ளது.

### பயிற்சிச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராப்பிரிவினால் நடாத்தப்படவுள்ள சமூக மேம்பாட்டுப் பணியாளர் பயிற்சிச் செயலமர்வு எதிர் வரும் வெள்ளிக்கிழமை காலை ஒன்பதுமணிக்கு முறைசாராப் பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் பயிற்சி கொள்ள விரும்புவோர் முறைசாராப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

(மு)

## தமிழீழ மீட்பு நிதிபற்றிய விளக்கவுரைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதிபற்றிய போர்க்கால விளக்க உரைக் கூட்டம் இன்று மாலை 6 30 மணிக்கு இணுவில் கந்தசாமி கோவில் பகுதியில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் நடாத்தப்படவுள்ள மேற்படி கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்கள் உரை நிகழ்த்தவுள்ளனர்.

இக்கூட்டத்தில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

இராணுவ பிடிக்குள் 200 குடும்பங்கள்

# பெண்கள் மீது பாலியல் வன்முறை பலர் வெட்டியும் சுட்டும் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் எல்லையோரக் கிராமங்களான பன்னிரண்டாம், பதின்மூன்றாம் கிராமங்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் சுமார் இருநூறுக்கு மேற்பட்ட தமிழர் குடும்பங்கள் சிக்குண்டு இருப்பதாக தெரிய வருகின்றது.

அங்கு வீடுகள் உடைக்கப்பட்டு, தளபாடங்கள், உபகரணங்கள் என்பன இராணுவத்தினரால் உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்டு வருவதாகக் காயங்களோடு தப்பி வந்த இளம்பெண் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்; இப்பகுதியில் உள்ள இளம் பெண்கள் பலர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும், பலர் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டு சடலங்கள் கிணறுகளில் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமங்களை அம்பாறை மாவட்டத்துடன் இணைத்து சிங்களமயமாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியே தமிழர்கள் மீதான இத்தகைய இராணுவத்தின் செயற்பாடுகள் எனக் கருதப்படுகின்றது.

இப்பகுதியிலுள்ள, 35ஆம் கிராமம், பக்கிஎல்லை, சின்னவத்தை, பூச்சிக்கூடு பாலையடிவெட்டை, 37 ஆம் கிராமம், கல்வெட்டை. மாலயர் கட்டு, கெவுளியாமடு, புல்லுமலை, 39ஆம் கிராமம் ஆகிய கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் முற்றாக வெளியேற்றப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

2000 ஆண்டளவில்

## இளம்பிள்ளைவாத நோய் உலகில் ஒழியும்

(நியூயோர்க்)

இரண்டாயிரம் ஆண்டளவில் உலகிலிருந்து இளம்பிள்ளை வாத நோயை ஒழித்து விடலாம் என்ற நம்பிக்கை இருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இந்த நோயை ஒழித்துக் கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை உலக சுகாதார ஸ்தாபனம் தீவிரமாக மேற்கொண்டுவருகின்றது என்றும் இரண்டாயிரமாம் ஆண்டளவில் ஒழித்துக் கட்டலாம் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அந்த ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

## அதிபர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள்

(நல்லூர்)

நிறைவேற்று அதிபர்களை நிரந்தரப்படுத்தும் திட்டத்தின்கீழ் தற்போது பாடசாலைகளில் பதில் கடமையாற்றும் அதிபர்கள் கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் 89 6-1ஆம் திகதியில் இருந்து செயற்படும் படியாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டு] வருகின்றன.

வேலணைக் கோட்டத்தில் இவ்வாறு கடமையாற்றிய மூவர் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி புதிய நிரந்தர நியமனம் பெறும் அதிபர்களின் சம்பளத் திட்டமும் 89-6-1ஆம் திகதி தொடக்கம் மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்

நாட்டில் சுமத்தப்பட்டுள்ளன. ஆகவே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முடிவுக்குக்கொண்டுவர அதனை தோல்வியடையச் செய்ய வேண்டும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்திற்கும் பதில் அளிப்பதற்குத் தேவையான ஆவணங்களும் அத்தாட்சிகளும் என்னிடம் இருக்கின்றன.

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை, ஈரோஸ் இயக்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டமை, வட பகுதியில் யுத்தநிறுத்தம் செய்

சபாநாயகரைப் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

சபாநாயகரைப் பதவி நீக்கம் செய்ய எதிர்க்கட்சிகள்

உத்தியோகபூர்வ நிராகரித்திருப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்

உலகத் தமிழர்

வும் பெற்று வருகிறோம் நாம்

ஒரு குடும்பத்துக்குவழங்கப் படும் ஆகக்கூடியதான நஷ்ட

நாட்டில்

சுமத்தப்பட்டுள்ளன. ஆகவே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முடிவுக்குக்கொண்டுவர அதனை தோல்வியடையச் செய்ய வேண்டும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்திற்கும் பதில் அளிப்பதற்குத் தேவையான ஆவணங்களும் அத்தாட்சிகளும் என்னிடம் இருக்கின்றன.

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை, ஈரோஸ் இயக்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டமை, வட பகுதியில் யுத்தநிறுத்தம் செய்தமை ஆகியவை மக்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தவறான வழியில் இட்டுச் செல்வதற்குத் தெரிவிக்கப்பட்ட அப்பட்டமான பொய்கள் என்பதை விபரத்தோடு நிரூபித்துக் காட்டுவேன்.

அதிருப்தியாளர்கள் எட்டுப் பேரும் கடந்த ஒரு மாத காலமாக தம்மோடு நாற்பதுபாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள் என்று தெரிவித்திருந்தனர். ஆனால்இது இப்போது பொய்யாகி விட்டது.

அதிருப்தியாளர்கள் திட்டமிட்டு இருந்த அரசாங்க அமைச்சரவையில் அமைச்சர் பதவிகளை வழங்குவதாக உறுதி வழங்கப்பட்டதாகவும். பெருந்தொகைப்பணம் வழங்குவதாக அவர்கள்உறுதியளித்தனர் என்றும் என்னிடம் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சபாநாயகர் என் மீதான குற்றச்சாட்டை நிராகரித்ததன் மூலம் நாட்டை எதிர்நோக்கிய கஷ்டநிலை நீங்கியது என்றும் பிரேமதாசா தெரிவித்தார்.

# இளம்பிள்ளைவாத நோய உலகில் ஒழியும்

(நியூயோர்க்)

இரண்டாயிரம் ஆண்டளவில் உலகிலிருந்து இளம்பிள்ளை வாத நோயை ஒழித்து விடலாம் என்ற நம்பிக்கை இருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இந்த நோயை ஒழித்துக் கட்டுவதற்குரிய நடவடிக்கைகளை உலக சுகாதார ஸ்தாபனம் தீவிரமாக மேற்கொண்டுவருகின்றது என்றும் இரண்டாயிரமாம் ஆண்டளவில் ஒழித்துக் கட்டலாம் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அந்த ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

சபாநாயகரைப்

செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

சபாநாயகரைப் பதவி நீக்கம் செய்ய எதிர்க்கட்சிகள் நீதிமன்றத்தை நாட இயலாதிருந்தாலும் எதிர்க் கட்சிகள் சபாநாயகரைக் குறை சொல்வதையடுத்து சபாநாயகர் தானாகவே முன்வந்து பதவியிலிருந்து விலக வேண்டிய இக்கட்டான நிலையைச் சந்திப்பதாகச் செய்தியாளர் தெரிவிக்கின்றனர்.

சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லா பிரேரணையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கியமுன்னணி, ஐக்கிய சோஷலிச கூட்டணி, ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணி, நவசமசமாஜக் கட்சி,லங்கா சமசமாஜக்கட்சி ஆகியவையும் கைச்சாத்திட்டுள்ளன.

சிறிலங்கா

மிக்க வேண்டும்என்று எதிர்க் கட்சித் தலைவர்கள் தரப்பில் கோரப்பட்டது.

இந்தக் குற்றச் சாட்டுமனுவைச் சபாநாயகர் நிராகரித்ததைச் செய்தியாளர் கூட்டத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், மற்றவர்களும் கண்டித்தார்கள்.

உத்தியோகபூர்வ

நிராகரித்திருப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகம் இருக்கின்றதா என்று சிறிமாவோ பண்டாரநாயக்கா கேட்டபோது அதில் எந்தவித பிரச்சினையுமில்லை என்று சபாநாயகர் தெரிவித்தார்.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரிவுரைகளின்...

கிறது. வீரத்தின் சாட்சியாய் நெஞ்சிலே குண்டினை ஏந்தியபடி குருதி கொப்பளிக்க அவள் சாய்கிறாள். ஆம்! எங்கோ இருந்து ஒரு கொடியவனின் குண்டு அவள் உடலில். அந்தச் சண்டையில் பெண் போராளிகள் பல ஆயுதங்களை எடுத்தார்கள். அவள் அடிக்கடி சொல்வாள். சண்டையில் நாங்கள் ஆயுதங்கள் எடுக்கவேண்டும். அப்பிடிநல்லா அடிபட வேணும்' என்று. அப்படியே சண்டை பிடித்தார்கள். ஆயுதங்கள் எடுத்தார்கள். ஆனால் அந்த உணர்வினை ஊட்டியவள் அங்கே இல்லை. ஒரு உன்னதமான போராளியை எமது இயக்கம் இருந்தது. ஒரு பேராசிரியரை மகளிர் படைப்பிரிவு இழந்தது. ஆனால் அவள் வளர்த்த பிள்ளைகள் அவளின் உணர்வைச் சுமந்து இன்று பல களங்களில்...

வில் சுமார் இருநூறுக்கு மேற்பட்ட தமிழர் குடும்பங்கள் சிக்குண்டு இருப்பதாக தெரிய வருகின்றது.

அங்கு வீடுகள் உடைக்கப்பட்டு, தளபாடங்கள், உபகரணங்கள் என்பன இராணுவத்தினரால் உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்டு வருவதாகக் காயங்களோடு தப்பி வந்த இளம்பெண் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்; இப்பகுதியில் உள்ள இளம் பெண்கள் பலர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும், பலர் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டு சடலங்கள்

உலகத் தமிழர்

கும் உலகிலுள்ள அனைத்துத் தமிழ் மக்களுக்கும் ஏற்படும் இழப்புக்களாகும்.

ஒரு நாட்டின் சுதந்திரத்திற்காக போராடும் வாய்ப்பு கிடைத்தற்கரியது. இன்று விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளாதவர்கள் அதற்காக ஒரு காலத்தில் வருந்த வேண்டியேற்படும். ஈழத்தமிழன் வடித்த கண்ணீராலேயே கடல்நீர் உப்பானது என அன்று பேரறிஞர் அண்ணாத்துரைகூறினார். ஆனால் இன்று ஈழத்தமிழர் வடிக்கும் கண்ணீரைத் துடைக்க விடுதலைப் புலிகள் சிந்தும் குருதியினால் தமிழீழமண்சிவக்கிறது.

சிறிலங்கா அரசு தமிழரை அழிக்க வரவு செலவுத் திட்டம், தேசிய பாதுகாப்புநிதி போன்ற பலவேறு வழிமுறைகளால் கோடிக் கணக்கான ரூபாய்களைப் பெற்று முப்படைகளுக்குமாக செலவிட்டு வருகிறது. ஆனால் நாம் தமிழீழ மீட்பு நிதிக்கென வசதி படைத்தோரிடமிருந்து கடனாக பவுணையோ, காசையோபெற்று வருகிறோம். கடந்த மார்கழி வரை அனைவரிடமும் இரண்டு பவுண் என கேட்டு வந்தோம். ஆனால் தற்போது வசதிபடைத்தோரிடம் வசதிக்கேற்ப கூடுதலாக

செயற்பாடுகள் எனக் கருதப் படுகின்றது.

# அதிபர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள்

(நல்லூர்)

நிறைவேற்று அதிபர்களை நிரந்தரப்படுத்தும் திட்டத்தின்கீழ் தற்போது பாடசாலைகளில் பதில் கடமையாற்றும் அதிபர்கள் கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் 89 6-1ஆம் திகதியில் இருந்து செயற்படும்படியாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டு] வருகின்றன.

வேலணைக் கோட்டத்தில் இவ்வாறு கடமையாற்றிய மூவர் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி புதிய நிரந்தர நியமனம் பெறும் அதிபர்களின் சம்பளத் திட்டமும் 89-6-1ஆம் திகதி தொடக்கம் மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வும் பெற்று வருகிறோம் நாம் பெறும் மீட்பு நிதிக்கான கடனை திரும்பச் செலுத்துவதிலும அக்கறையுடன் செயல்பட்டு வருகிறோம்.

நாம் மக்களைத் துன்புறுத்தி மீட்பு நிதியினை பெற்று வருவதாக சிலர் கூறுகிறார்கள். ஆனால் நாம் வசதியற்றவர்கள் செலுத்திய அல்லது செலுத்த முன்வந்த மீட்பு நிதியினை விசுமறிந்து திருப்பிக் கையளித்து வருகிறோம். இந்த வகையில் சங்கானை, வட்டுக்கோட்டை, கோப்பாய் பகுதிகளில் வசதியற்றவர்களிடம் பெற்றதை மீளளித்துள்ளோம். உண்மையாகவே வசதியுள்ள பலர் மீட்புநிதி செலுத்தாது உள்ளனர். மேற்கு நாடுகளில் தொழில் புரிவோர் உள்ள குடும்பங்கள்கூட செலுத்தவில்லை. அவர்கள் அங்குள்ள தங்கள் பிள்ளைகளுடன் தமக்குஎந்தத்தொடர்பும் இல்லை என்றும் அவர்கள் திருமணம் செய்து விட்டார்கள் என்றும் தாங்கள் பிள்ளைகளை அனுப்ப பெற்ற கடனை மீளச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் கூறுகிறார்கள். இவர்களில் பலர் உண்மையை மூடிமறைத்து மீட்புநிதி செலுத்துவதிலிருந்து விலக்குப்பெற முயற்சிக்கிறார்கள் எனத் தெரிவித்தார். (ஈ0)

றப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழதேசிய ஆசிரியர்ஒன்றியத்தினரால் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த வேலைத்திட்டங்களை தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதற்கான கலந்துரையாடல் வரும் சனிக்கிழமை (12-10-91) காலை 10.00 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் ஒன்றியத்தின் அனைத்து கோட்ட நிர்வாகக்குழு மத்தியகுழு உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதன் செயலாளர் அறிவித்துள்ளார்.

விவாதத்தை

லாப் பிரேரணையா முதலில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் தீர்மானிக்க வேண்டும் என்றும் சிறிமாவோ கோரியுள்ளார்.

நோயாளரை

5 30மணிவரையும் அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச, க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.